செ.வெ.எண்:58 நாள்:21.06.2021

# சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, கொடிசியா கொரோனா சிகிச்சை மையத்தில் உள்ள சித்தமருத்துவ சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு யோகா பயிற்சி வழங்கப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

---

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, கொடிசியா கொரோனா சிகிச்சை மையத்தில் உள்ள சித்தமருத்துவ சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு யோகா பயிற்சி வழங்கப்பட்டு வருவதை இன்று(21.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.தனம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

யோகா கலையின் பெருமையை உலகம் முழுவதும் பரவச் செய்யும் வகையில் சர்வதேச யோகா தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 21-ம் தேதி சர்வதேச யோகா தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த பல்வேறு கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்காரணமாக, தற்போது கொரோனா தொற்றுப் பாதிப்பு வெகுவாக குறைந்துள்ளது.

கொரோனா தொற்று பாதிப்பிற்குள்ளானவர்களை கொரோனா தொற்றிலிருந்து மீட்டெடுக்கும் சிறப்பு முயற்சியாக, கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் விருப்பத்திற்கு ஏற்ப சித்த மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில், கொடிசியா கொரோனா சிகிச்சை மையத்தில் சித்தமருத்துவ சிகிச்சை பிரிவும், ஸ்ரீனிவாச கல்யாண மண்டபத்தில் சித்தமருத்துவ சிகிச்சைப் பிரிவும் செயல்பட்டு வருகிறது.

கொடிசியா கொரோனா சிகிச்சை மையத்தில் இதுவரை, சித்தமருத்துவ சிகிச்சை பிரிவில் இதுவரை 286 ஆண்கள், 163 பெண்கள், 10 குழந்தைகள் என மொத்தம் 459 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதில், 255 ஆண்கள், 146 பெண்கள், 9குழந்தைகள் என மொத்தம் 410 பேர் முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்போது 30 ஆண்கள், 15 பெண்கள் மற்றும் ஒரு குழந்தை என மொத்தம் 46 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஸ்ரீனிவாச கல்யாண மண்டபத்தில் சித்தமருத்துவ சிகிச்சைப் பிரிவில் 137 ஆண்கள், 94 பெண்கள், 9 குழந்தைகள் என மொத்தம் 240 பேர் சிகிச்சை பெற்றதில் இதுவரை 118 ஆண்கள், 84 பெண்கள், 9குழந்தைகள் என மொத்தம் 211 பேர் முழுயாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்போது 3 ஆண்கள், 4 பெண்கள் என மொத்தம் 7 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சித்தமருத்துவ சிகிச்சை பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு அமுக்கரா மாத்திரை, கபசுர குடிநீர், மூலிகை தேநீர், நீராவி சிகிச்சை உள்ளிட்ட உள்சிகிச்சைகளும், மனநல கல்வி, யோகாப்பயிற்சி, மூச்சுப்பயிற்சியும் வழங்கப்படுகிறது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சிகிச்சைகளுடன், யோகா பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் சுவாசம் சீராக இருக்கும், நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிப்பதுடன், உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. இதனால் இங்கு சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகளுக்கு இப்பயிற்சி மிக பயன் உள்ளதாக இருக்கிறது.

இன்று சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, கொடிசியா கொரோனா சிகிச்சை மையத்தில் உள்ள சித்தமருத்துவ சிகிச்சை பிரிவில் உள்ளவர்களுக்கு யோகா பயிற்சி வழங்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிடப்பட்டது.

கடந்த மாதங்களில் இருந்த கொரோனா தொற்றுப் பாதிப்பைவிட தற்போது தொற்று பாதிப்பு வெகுவாக குறைந்துள்ளது. இதற்கு கோயம்புத்தூர் மாவட்ட பொதுமக்களின் ஒத்துழைப்பும் மிக முக்கிய காரணமாகும்.

பொது மக்கள் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக வெளியில்செல்லும் போது கண்டிப்பாக முகக் கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை முறையாக கடைப்பிடிக்க வேண்டும். மேலும், கொரோனா தொற்றை முழுவதுமாக நம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்து ஒழிப்புதற்கு பொதுமக்கள் முழுஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**